Serial number and name of the Industrial Training Institute/Centre	Trade
(1)	(2)
(4) Industrial Training Institute, North Madras. Madras-21—cont.	(v) Electroplater.
	(vi) Fitter.
	(vii) Machinist (Composite).
	(viii) Machinist (Miller).
	(ix) Welder.
	(x) Moulder.
	(xi) Pattern-maker.
	(vii) Plumber.
	(xiii) Turner,
	(xiv) Wireman.

இணைப்பு 2.

39-ம் பக்கத்தில் 156-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான கலைநுணுக்கம் வாய்ந்த சிலைகளின் திருட்டு அல்லது அவற்றை எடுத்துக்கொண்டு வேறு சிலைகளை வைத்தல் போன்ற செயல்களைத் தடுக்க, இந்து சமய அறக்கட்டளைகள் துறையின் துணை ஆணையாளர்களுக்கும், உதவி ஆணையாளர்களுக்கும் கீழ்க்கண்ட கட்டளைகளை இந்துசமய அறக்கட்டளைகள் துறை ஆணையாளர் பிறப்பித்துள்ளார் :—

1. வெண்கலம் பிற உலோகங்களாலான ஒவ்வொரு சிலையையும் பொறுத்த வரையில், அதன் பெயர், உயரம், மற்றும் சிறப்புக் கூறுகள் குறித்து விவரமான குறிப்பு ஒன்று தயாரிக்கப்படவேண்டும். ஒவ்வொரு சிலைக்கும் மூன்று நிழற்பட நகல்கள் எடுக்கப்படவேண்டும். சிலைகளின் நிழற்படங்களைக் கொண்ட மூன்று நிழற்படத் தொகுப்புப் புத்தகங்கள் தயாரிக்கப்படவேண்டும். இதன் ஒரு நகல் ஆணையாளரின் அலுவலகத்துக்கும் ஒரு நகல் உதவி ஆணையாளருக்கு அல்லது துணை ஆணையாளருக்கும் அனுப்பப்படவேண்டும். மூன்றுவது நகல் கோயிலில் வைத்து வரப்படவேண்டும்.

2. சிலைகளின் உயரம், எடை, அதில் அடங்கியுள்ள உலோகங்கள் முதலிய விவரங்களுடன் அந்தச் சிலைகளின் நிழற்படங்கள் ஒவ்வொரு கோயிலிலும் முதன்மையான இடத்தில் மாட்டி வைக்கப்படவேண்டும்.

3. திட்டமிட்டுக் களவாடும் திருடர்கள் சிலைகளை அப்புறப்படுத்துவதைத் தடுக்கும் பொருட்டு கடவுளர் சிலைகள் பெருமளவுக்குக் காணப்படும் கோயில்களில் காவலாள் நியமிக்கப்பட வேண்டும்.

1972 சனவரி 29]

4. கோயிலில் உள்ள பயன்படுத்தப்படாத கடவுள் சிலைகள், இக்காரியத்திற்காக ஒவ்வொரு துணை ஆணையாளரின் கோட்டத்திலும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள மைய இடத்தில் வைக்கப்பட வேண்டும். தெரிந்தெடுக்கப்பட்ட கோயில்கள் பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் கொண்ட அறை அல்லது கட்டிடத்துக்கு வகை செய்யும்படித் துணை ஆணையாளர்களும், உதவி ஆணையாளர்களும் பார்த்துக் கொள்ள வேண்டும். சிலைகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்களுக்கு வேலியிடப்பட வேண்டும்.

5. அறங்காவலர்கள், கடவுளர் சிலைகளைத் திருடர்கள் களவாட அச்சப்படும்படி பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

6. கடவுளர் சிலைத்திருட்டு குறித்த வழக்கு காவல்துறைக்கு அது குறித்த முழு விவரங்களுடன் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும். கோயில் பணியாளர் யாருடைய கவனமின்மையால் இத்திருட்டு நடைபெற்றதோ அவர்மீது உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

கடவுளர் சிலைத் திருட்டு குறித்து புலன் விசாரணைப் பணிகளுக்கென்று காவல் துறை சிறப்புப் பணியாளர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS